தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை - 2024
-----------------------------------------------------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 07 இன் 49 பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களுக்குரிய சொத்து வகுப்பினை முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 58,936,609 தொகை பெறுமதியான மோட்டார் வாகனங்கள் சொத்துக்கள் வகுப்பினை அடங்கியுள்ள 47 மோட்டார் வாகனங்களில் 09 மோட்டார் வாகனங்கள் 2021 ஆண்டின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் மீதும், ஏனைய 38 வாகனங்கள் கிரயத்திலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், தளபாடங்கள் மற்றும் உபகரண இரண்டு சொத்து வகுப்பிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த சொத்து விடயங்கள் மாத்திரம் 2019 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மோட்டார் வாகன வகுப்பு காணப்படுகின்ற தலைமையலுவலத்தின் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதுடன், மீதியான மோட்டார் சைக்கிள்கள் தொழில்நுட்ப குழுவினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இந்த மோட்டார் சைக்கிள்களில் 17 இனை அப்புறப்படுத்தும் படி கொம்ட்ரோலர் ஜனரல் அலுவலகத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், மீள்மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது என. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது மொத்த சொத்து வகுப்பையும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதென நிதிக்கூற்றுக்களில் சான்றுபடுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்வ தற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் 65 பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதிப் பெறுமதி மற்றும் அவற்றின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களின் படி திறன்மதிப்பு சூனியமாக இருக்கும் கிரயம் / மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 77,290,013 தொகைக்கான 2,456 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்களின் பயன்படு ஆயுட்காலம் சரியாக மீளாய்வு செய்யாத காரணத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 | 2025 ஆண்டின் போது இந்த நிலைமை தொடர்பாக கலந்துரையாடி நியமத்தின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்ய வேண்டியதுடன், அதன்படி, ஏற்படக்கூடிய மதிப்பீட்டு வித்தியாசம் கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் திருத்துவதற்கு நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன் படி திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | நியமம் 08 இன் பந்தி 19 இற்கு முரணாக கொடுப்பனவு நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்ட நிலுவை சம்பளக் கொடுப்பனவு ஒன்றிற்காக ரூபா 641,358 தொகை செலுத்த வேண்டிய சம்பளம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலுவை சம்பளக் கொடுப்பனவிற்காக ஒதுக்கப்பட்ட தொகை, நிச்சயிக்கப்பட்டதனால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டது. மேலும், பணிப்பாளர் சபைத் தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டியிருப்பதனால் கொடுப்பனவு அலுவல்களில் தாமதம் ஏற்பட்டது என. | நியமத்தின் படி கணக்கீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதென நிதிக்கூற்றுக்கள் சான்றுபடுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நியமம் 08 இன் பந்தி 100 இன் படி அறிக்கை தினத்தில் காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்கள் வகுப்புக்காக நிகழத்தக்க பொறுப்பின் தன்மை தொடர்பாக சுருக்கமான விபரம் ஒன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையின் மீளாய்வாண்டு இறுதியளவில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற மூன்று வழக்கு அலுவல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.<br>அதேபோல், நியமத்தின் பிரிவு 22 இன் படி அந்த அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நேரிடுகின்ற சட்ட வரைஞர் கட்டணத்திற்காகவும் ஒதுக்கம் மேற்கொண்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் காணப்படுகின்ற அதிகாரசபைக்கு எதிராக 03 வழக்கு அலுவல்கள் காணப்படுவதாக சட்டப் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருப்பதுடன், எதிர் காலத்தில் அவ்வாறான நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. இந்த வழக்கு முடிவடையும் நாளொன்று / கால வரையறையொன்று அல்லது பெறுமதி தொடர்பாக எதிர்வுகூற முடியாமையினால் சட்டக் கட்டணத்திற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்படவில்லை என. | நியமத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் மற்றும் உரிய ஒதுக்கங்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதென நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நியமம் 09 இன் பந்தி 15 இன் படி கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு இருப்புக்கள் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 05 இன் கீழ் இருப்புக்கள் சராசரி கிரய அடிப்படையில் (average cost) மதிப்பீடு செய்யப்பட்டதென காட்டப்பட்டிருந்தது. | இருப்பு கணித்தல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் படி மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | நியமத்தின் படி நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நியமம் 11 இன் பந்திகள் 12 மற்றும் 93 இன் படி பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்கள் என அறிக்கையிடும் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த நன்கொடைகள் மற்றும் | எதிர் காலத்தில் அனைத்து மூலதன மானியங்களும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் படி வருமானம் என இனங்கண்டு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மானியங்கள் அனைத்தும் வருமானம் என இனங்காண வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மூலதன மானியம் என மற்றும் செயற்திட்ட மானியம் என கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 11,398,662 தொகை வருமானம் என இனங்கண்டிருக்கவில்லை. மேலும், அரச மூலதன மானியங்கள் காலத் தேய்மானம் கணிக்கப்பட்டு வந்திருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரச மூலதன மானிய மீதி என ரூபா 36,452,455 தொகை நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | |
| (எ) | நியமம் 14 இன் பந்திகள் 21, 22 மற்றும் 23 இன் படி ரூபா 2,364,438 தொகைக்கான பணிப்பாளர் சபை வேதனம் என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பணிப்பாளர் சபை வேதனம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | - மேற்படி - |
| (ஏ) | நியமம் 19 இன் பந்திகள் 76 மற்றும் 77 இன் படி ஊழியர் நலன்கள் இனங்காணல் மற்றும் அளவீடு செய்தலின் கீழ் நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்ட ஊழியர் நலன்கள் மற்றும் பொறுப்புக்களை தற்போதைய பெறுமதிக்கு அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 91,098,000 தொகைக்கான பணிக்கொடை ஒதுக்கத்திற்காக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நியமம் 19 இன் படி பணிக்கொடை கொடுப்பனவு கணிக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (ஐ) | நியம இலக்கம் 20 இன் 17, 26 மற்றும் 118 பந்திகளின் படி கணினி முறைமைகள் மற்றும் கணினி மென்பொருள்கள் அருவச் சொத்துக்கள் என இனங்கண்டு பயன்படு ஆயுட்காலம் முழுவதும் காலத் தேய்மானம் கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் 2024 ஜனவரி மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,033,718 தொகைக்கான 02 தரவு முறைமைகளின் பெறுமதி | நியமம் 20 இன் படி பரிசோதனை மேற்கொண்டு 2025 ஆண்டின் கணக்குகளில் இது தொடர்பாக சீராக்கல் மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | - மேற்படி - |

உபகரணங்களின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2017 ஆண்டில் கணக்கீடு மற்றும் சம்பளங்கள் தொடர்பாக ரூபா 473,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணக்கீட்டு முறைமை அருவச் சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்துவதற்கு பதிலாக குறிப்பிட்ட வருடத்தின் செலவுகள் என பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அருவச் சொத்துக்கள் ரூபா 5,033,718 தொகை மற்றும் தடுத்து வைக்கப்பட்ட உழைப்பு ரூபா 473,000 தொகையினால் குறைவாகவும், உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,506,718 தொகையினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் படி அரச மானியங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்கள் தொடர்பாக மீதியொன்று காணப்படாத போதிலும், 06 சொத்து விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 6,302,797 தொகை பிழையான முறையில் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு என சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு மிகைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு மிகை மற்றும் ஆண்டிற்கான பற்றாக்குறை அந்த எண்ணிக்கையினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுமானத் தேய்வின் மூலம் நிதி செயலாற்றுகைக் கூற்றிற்கு ஏற்படுகின்ற தாக்கத்தை அகற்றி உண்மையான இலாபம் / நட்டத்தை சித்தரித்துக் காட்டுவதற்காக இவ்வாறு சில விடயங்கள் தொடர்பாக பெறுமானத் தேய்வுக்கு சமமான எண்ணிக்கையொன்று சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுக் கணக்கிலிருந்து அகற்றி செலவொன்றென நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சரியான பெறுமானத் தேய்வின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொண்டு இலாபம் அல்லது நட்டம் கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 ஆண்டில் அதிகாரசபைக்கு எதிராக வெளி நிறுவனம் ஒன்றினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த 02 வழக்கு அலுவல்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிக் காணப்பட்ட சட்டவரைஞர் கட்டணத்திற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன், மீளாய்வாண்டின் போது அதற்காக செலவிடுவதற்கு நேரிட்டிருந்த ரூபா 228,500 தொகைக்கான சட்ட வரைஞர் | 2023 ஆண்டில் இந்த சட்ட கட்டணம் செலுத்துவதற்குள்ள ஏற்பாடுகள் அமைச்சினால் வழங்கப்படாமையால், 2024 ஆண்டில் செலுத்தப்பட்டது. எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | நியமம் 08 இன் படி ஒதுக்கங்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் பயிற்சி வழங்கல் மற்றும் ஏனைய செலவுகள் என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் தடுத்து வைத்தக்ப்பட்ட உழைப்புக்கள் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 4,012,402 தொகை மிகையாக மேற்கொண்டிருந்தமையால், ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்க மீதி அந்த எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2023.12.31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தொடர்ந்து வரும் வருடத்தில் கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகள் தொடர்பாக ரூபா 474,793.50 தொகையொன்று குறுகிய கால பணிக்கொடை ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் கடமையாற்றிய 14 உத்தியோகத்தர்கள் எதிர்பாராத விதமாக விளகிச் சென்றமையால் பணிக்கொடைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விளகிச் செல்லல் தொடர்பாக எதுவித அறிவுறுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொண்டிருக்காமையால், குறுகிய கால பணிக்கொடைக் கணக்கிற்கு ஒதுக்கம் மேறகொள்ளக்கூடாது. | பணிக்கொடை ஒதுக்கத்தை சரியாக கணித்து நியமங்களுக்கு இணங்க உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 1992 நிதிப் பிரமாணங்கள் 371(5) | அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 505,491 இற்கான முற்பணங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்தம் வழங்கப்படுகின்ற முற்பணங்கள் தொடர்பாக ரூபா 505,491 தொகை தீர்க்கப்படாத முற்பணங்கள் என 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதியாக காணப்பட்டதுடன், | நிதிப் பிரமாணம் 371(5) இன் படி திசெம்பர் 31 திகதியளவில் முற்பணங்களை தீர்ப்பதற்கான அறிவுரை வழங்கப்பட்டு அதன்படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவற்றிற்குரிய தீர்த்தல் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மீதித்தொகை 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அனுப்பப்படாமையாகும். எதிர் காலத்தில் முற்பணங்களில் மீதியாகியுள்ள ஏற்பாடுகளை வருட இறுதிக்கு முன்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 1992 நிதிப் பிரமாணங்கள் 371(5) | உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள நிமித்தத் துணைக் கட்டுநிதிகள் குறிப்பிட்ட கருமத்திற்கு பயன்படுத்தாமல் 02 நாட்களுக்கும் 69 நாட்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் கையில் தடுத்து வைத்து முழுத் தொகையும் திருப்பி தீர்த்திருந்த 09 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | ஆண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட செய்முறைசார் தடைகள் மற்றும் எதிர்பாராதவாறு உத்தியோகத்தர்கள் விளகிச் செல்லல் போன்ற சிக்கல் தன்மை ஏற்படுகின்றமையால் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு முடியாமல் போனது. அதன்படி, மொத்தத் தொகையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டது என. எதிர் காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்ந்து கொள்வதற்காக உச்ச மட்ட அளவில் செயற்படும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | துணைக் கட்டுநிதிகள் வழங்குதல் மற்றும் தீர்த்தல் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதென உறுதிப்படுத்திக்கொள்வதற்கான கட்டுப்பாட்டு முறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றதென உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 08/2019(I), 08/2019(II) | இலங்கையில் e-GP பெறுகை செய்முறை அறிமுகப்படுத்தல் தொடர்பாக 2020 ஜனவரி 31 திகதிக்கு முன்னர் அனைத்து அரச நிறவனங்களும் e-GP பெறுகை முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டு அந்த முறைமைகள் ஊடாக பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் கணக்காய்வுத் திகதியாகிய 2025 மே 16 திகதி வரை அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தியிருந்த பெறுகை வழிகாட்டல் 2024 இன் படி தற்போது அதிகாரசபையினால் e-GP பெறுகை செய்முறை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டது என. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் e-GP பெறுகை முறைமையில் பதிவு செய்து அந்த முறைமையினூடான பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1998 இன் 50 இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம் | | | |
| | (i) பிரிவு 14 (அ) மற்றும் (ஊ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டு 21 வருடங்கள் கழிந்த பின்னர் 2019 ஒக்தோபர் 29 திகதி அதிகாரசபையின் அடிப்படைக் குறிக்கோளாகிய சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை வழங்குதல் தொடர்பாக தேசிய கொள்கை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அத் திகதி முதல் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2025 மே 16 திகதி கணக்காய்வுத் திகதி அளவிலும், தேசிய கொள்கையை செயற்படுத்துவதற்காக ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. அதன் காரணமாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கொள்கை செயற்படுத்தி அதிகாரசபையின் அடிப்படைக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் | 2025 ஏப்ரல் 02 திகதி வரிசை அமைச்சுச் செயலாளரினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கொள்கை செயற்படுத்துவதற்கான ஐந்தாண்டுத் திட்டத்திற்காக எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக 2025 மே 27 திகதி வரிசை அமைச்சுக்கு அனுப்புவதற்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துவதற்குரிய ஐந்தாண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. | | |
| (ii) பிரிவு 14 (க) | அதிகாரசபை நிறுவப்பட்டு 26 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அதிகாரசபையின் அடிப்படைக் கொள்கையொன்றாக காணப்படுகின்ற தேசிய தர முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அதனை பேணிச் செல்வதற்கு முடியாமல் இருந்தது. அதன் காரணமாக 14 (எ) (ஏ) (ண) பிரிவுகளின் படி சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சட்டத்தை செயற்படுத்தியது தொடர்பாக முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் மற்றும் சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக பொது மக்கள் எதிர்பார்க்கும் தகவல்கள் வழங்குவதற்கு முடியாமல் உள்ளது. | 2021 ஆண்டின் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி புதிய தர முறைமையினை தயாரித்தல் இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டதுடன், 2023 ஜனவரி 01 திகதி முதல் நிறவன மட்டத்தில் பயன்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதிகாரசபையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்று காணப்படாமை மற்றும் தகவல் தொழில்நுட்பம் / தர முறைமை அறிவுடனான உத்தியோகத்தர்கள் காணப்படாமையின் காரணத்தினால் அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படும் உள்ளக தர முறைமை தேசிய தர முறைமை வரை அபிவிருத்தி செய்வதற்கு முடியாமல் உள்ளது. அதற்காக புதிய பதவியணியினர் ஆட்சேர்த்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிடல் அமைச்சின் ஊடாக தேசிய தர முறைமையின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான தேசிய தகவல்கள் அடங்கிய தகவல் முறைமையொன்று விரைவாக நிறுவப்பட்டு தீர்மானம் எடுப்பதற்காக தேவையான தகவல்களை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (iii)பிரிவுகள் 14(உ)(எ)(ஏ)(ஒ)(ஓ) | 2014 ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 30 திகதி வரை அதிகாரசபைக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 107,663 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவற்றில் 46,813 முறைப்பாடுகள் அதாவது 43 சதவீத எண்ணிக்கையொன்று | தரவு முறைமையை நாளதுவரையாக்கி மூடுவதற்கு தேவையான பதவியணியினர் காணப்படாமை மற்றும் அன்றாடக் கடமையலுவல்கள் மேற்கொள்ள நேரிடுவதால், | சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அதிகாரசபைக்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளை விசாரணை செய்து முடிவுறுத்தும் செய்முறையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அதன்படி, சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றவர்களை பாதுகாப்பதற்கு மற்றும் அடைக்களம் வழங்குவதற்கு அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகத்திற்குரிய சட்டங்களை செயற்படுத்துதல், ஒருங்குறுத்தல், அனைத்து விசாரணை வழக்கு அலுவல்களின் முன்னேற்ற மீளாய்வு, துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சட்ட அதிகாரிகளுக்கு அனுப்புதல் போன்ற குறிக்கோள்கள் போதியளவு நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. | முறைப்பாடுகளை மூடும் கருமங்களின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. எனினும், தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைக்கு அறிவிக்கப்படுகின்ற அனைத்து முறைப்பாடுகளுக்கு தேவையான தலையீடுகள் அந்த முறைப்பாடு கிடைத்த சந்தர்ப்பத்திலேயே அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுரையொன்று வழங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv)பிரிவுகள் 14 (ஈ), 14 (ண) | துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், சிறுவர்களுக்கு காணப்படும் உரிமை தொடர்பாக மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தடுக்கும் முறை தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புத் தன்மை, சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக பொதுமக்கள்களுக்கு தகவல்கள் வழங்குதல் மற்றும் அறிவுறுத்துதல் அதிகாரசபையின் குறிக்கோளிடையே காணப்பட்டது. அதன்படி, அதிகாரசபையினால் பாடசாலைகளை பதிவு செய்தல், நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஏப்ரல் 15 திகதி அளவில் 1,396 பாடசாலைகள் மாத்திரம் பதிவு செய்திருந்ததுடன், 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது 46 மாவட்ட மாணவர் தூதுவர் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 24 மாவட்ட தூதுவர் கருத்தரங்கு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மாணவர் தூதுவர் நிகழ்ச்சித் திட்டம் 05 கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், கல்வி அமைச்சுடன் ஒன்றித்து மேற்கொள்ளப்படுகின்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக பதிவு செய்தல் கட்டாயப்படுத்தியிருக்கவில்லை. மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆண்டில் மாகாண மட்டத்தில் அதிபர்கள், மாணவ தலைவர்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டின் போது 24 மாவட்ட மாணவர் தூதுவர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 2024 ஆண்டின் போது 22 நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தது. மாணவ தூதுவர் மாவட்ட கருத்தரங்கு (தீர்வு கருத்தரங்கு) அனைத்து மாவட்டங்களிலும், ஒன்று | சிறுவர்களின் பாதுகாப்புத் தன்மை, சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக பொதுமக்கள்களுக்கு தகவல்கள் வழங்குதல் மற்றும் அறிவுறுத்துதல் அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் விரைவாக நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

வீதம் நடாத்துவதற்காக 25 மாவட்டங்களுக்கு வருடாந்த நிதி ஏற்பாடுகள் அனுப்பப்படுவதுடன், 2023 ஆண்டில் 09 மாவட்ட கருத்தரங்குகள் மற்றும் 2024 ஆண்டில் 15 மாவட்டக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டிருந்தன. பாடசாலையின் பரீட்சை அலுவல்கள், இடர் நிலைமைகள், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய போலவே கடந்த வருடத்தில் நடைபெற்ற ஜனாபதித் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக பாடசாலை நடைபெறும் நாட்கள் குறைவடைதல் ஆகிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. 2025 ஆண்டின் மாணவ தூதுவர் பாடசாலைகள் என பதிவு செய்யப்பட்டிருந்த 1,272 பாடசாலைகளில் அதிபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக 25 மாவட்டங்களுக்கும் ஏற்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன என.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,226,479 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,341,231 தொகையாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,114,752 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு திறைசேரியினால் வழங்கப்பட்ட மானியம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 12 திகதி அமப/21/1131/308/097 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி | மாகாண மட்டத்தில் வீடியோ சாட்சிகள் பதிவுசெய்யும் 09 அலகுகள் நிறுவுவதற்கு | அமைச்சரவை தீர்மானத்தின் படி மாகாண மட்டத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய சிறுவர்களினால் வழங்கப்படுகின்ற சாட்சிகளை வீடியோ பண்ணுவதற்காக 09 அலகுகள் மாகாண மட்டத்தில் நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு 2025 மே 16 திகதி அளவில் 04 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், 07 அலகுகளை செயற்படுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு முடியாமல் இருந்தது. தலைமை அலுவலகத்தின் மற்றும் ராகம வைத்தியசாலையில் 02 அலகுகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த இரணடு அலகுகளில் 2024 ஜனவரி 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் 205 சாட்சிகளை வீடியோப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கைகள் அதிகாரசபைக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | வீடியோ சாட்சிகள் பதிவு செய்யும் நிலையங்கள் நிறுவப்பட்டு வீடியோ சாட்சிகள் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டு உரிய விசாரணைகள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக உரிய வழக்கு அலுவல்கள் தொடர்பான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை காட்சிப்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 03 மாதங்களினுள் செயற்படுத்தப்பட வேண்டும் என தகவல் அறியும் ஆணைக்குழுவினால் 2024 ஏப்ரல் 17 திகதி கட்டளையொன்று விடுக்கப்பட்ட போதிலும், 2025 மே 16 திகதி வரை வழக்கு அலுவல்களின் முன்னேற்றம் தொழக்கு தொடர்பாக தகவல்களை காட்சிப்படுத்துவதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. | நாடு பூராகவும் காணப்படுகின்ற உயர் நீதிமன்றங்களில் நடத்தப்படுகின்ற அனைத்து சிறுவர் துஷ்பிரயோக வழக்கு அலுவல்கள் தொடர்பாக தகவல்கள் அதிகாரசபைக்கு சேர்த்துக்கொள்வதற்காக வெளி நிறுவனங்களுடன் தேவையான தொடர்பு ஒருங்கிணைப்பு அலுவல்கள் நடைபெற்று வருகின்றது. சேகரிக்கப்படுகின்ற தகவல்கள் பொதுமக்களின் காட்சிக்காக பொருத்தமான முறையில் தயாரிக்கும் அலுவல்களின் பின்னர் பொதுகமக்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது என. | வழக்கலுவல்களின் முன்னேற்றம் தொடர்பாக தயாரிக்கப்படும் தகவல்கள் காட்சிப்படுத்தும் திட்டம் விரைவாக செயற்படுத்தி தேவையான தகவல்கள் மற்றும் முன்னேற்றம் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், பணிப்பாளர் (நிதி) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு ஓர் உள்வாரி விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச தகைமைகளான முதற்பட்டம், முதுகலைப் பட்டம் மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 12 வருட அனுபவம் அல்லது பதவிக்குரிய துறையில் முகாமைத்துவ மட்டத்தின் (MM) தரம் | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை கடைபிடித்து நேர்முகப் பரீட்சை நடாத்தி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரி அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். கௌரவ நீதிமன்றத்தினால் அந்த பெண் உத்தியோகத்தருக்கு எதிராக நடைபெற்ற வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது என. | அனைத்து ஆட்சேர்ப்புக்களும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1 இல் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருக்காத, தாபனவிதிக் கோவையின் முதலாம் அனுபந்தத்திற்கு உட்பட்ட முறைகேடொன்று தொடர்பில் 2010 மே 21 அன்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு இணங்க, 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர், குறித்த குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படாத நிலையில், குறித்த பணி இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியை சேவை அனுபவம் பெற்றுக்கொண்ட காலப்பகுதியாக கருதி அதிகாரசபையால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தார். இதன் காரணமாக ஏனைய விண்ணப்பதாரிகளிடையே உயர் புள்ளிகளை பெற்று உரிய பதவிக்கு உரிய தகைமையை பெற்றிருந்தார். | | |
| (ஈ) | குறைந்த அடிப்படைத் தகைமைகள் காணப்படாத அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு முரணாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த 05 உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2023 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 மே 16 திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக நியமன அதிகாரியாகிய பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையினால் தீர்மானமொன்று வழங்கப்படவுள்ளதுடன், அது தொடர்பாக ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பாகவும் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு 2025 மே மாதம் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | அனைத்து ஆட்சேர்ப்புகளும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு புறம்பாக ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனக் கோவையின் சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அப்போது காணப்பட்ட சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் முள்ளைத்தீவு மாவட்ட அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2014 ஆண்டின் போது ரூபா 23,420,000 தொகை செலவிடப்பட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வாய்மொழி மூலம் சாட்டப்பட்டிருந்த கட்டிடத்தை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த கட்டிடத்தை பயன்படுத்தல் தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர் அந்த அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன்படி, முள்ளைத்தீவு மாவட்ட அலுவலத்தின் கட்டிடம் அதிகாரசபைக்கு இதுவரை உரித்தாக்கப்பட்டிருக்காமையால் அதன் உரிமை தற்போது பிரதேச செயலகத்திற்கு உரித்தாக காணப்படுவதனால் வரிசை அமைச்சினால் பொருத்தமான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவல்களை நடாத்திச் செல்வதற்காக கட்டிட வசதிகள் பெற்றுக்கொள்வதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் விரைவாக நடவடிக்கை எடுத்து அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்களை முறைப் பிரகாரம் நடாத்திச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2016 ஆண்டின் போது 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் ஒரு தடவையில் ரூபா 18,317,757 தொகை செலுத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து மாதிவல பிரதேசத்தில் காணியொன்று பெற்றுக்கொன்று 08 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்தக் காணி எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தேசிய சிறுவர் அறிவுரை நிலையம் மற்றும் தேசிய சிறுவர் அடைக்கல இல்லம் நிறுவுவதற்காக இந்தக் காணி அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட போதிலும், நிதி ஏற்பாடுகள் காணப்படாமையால் மற்றும் அரசின் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் அந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ள முடியவில்லை. எனினும், தற்போது முறைப் பிரகாரம் அந்தக் காணியை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அதற்கான கலந்துரையாடல் ஒன்று நகர அபிவிருத்தி அமைச்சருடன் மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த காணி உரித்தாக்கப்பட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது உரித்தாக்கப்பட்ட தேவைப்பாடு தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்தால், குறிப்பிட்ட காணியை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |